**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 74/2017**

**Deposition of Witnesses for PW5**

| | | | |
|---|---|---|---|
| Name | : | திருமதி.காவேரியம்மாள் | Caste: |
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **21.09.2024.**

## முதல் விசாரணை

நான் தற்போது கும்பகோணம் சிலை திருட்டு தடுப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.03.2017ம் தேதி ராமநாதபுரம் போதை பொருள் நுண்ணறிவு பிரிவு காவல் ஆய்வாளராக பணியில் இருக்கும்போது, காலை6 மணியளவில் ரகசிய தகவலாளி நேரில் ஆஜராகி கொடுத்த தகவலை காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு எழுத்து மூலமாக தெரிவித்தேன். அந்த தகவல் **அ.த.சா.ஆ.1** ஆகவும், அவரது உத்தரவின் பேரில் நிலையத்தில் அலுவலில் இருந்த த.கா.ஆனந்தன்,முருகேசன், அன்பழகன், ராஜேஷ்கண்ணன், அழகுதுரை, அருள் சுந்தர்சீ ஆகியோர்களுடன் தக்க உபகரணங்களுடன் 7 மணிக்கு நிலையத்தில் இருந்து புறப்பட்டு தகவலாளி சொன்ன சம்பவ இடமான ராமநாதபுரம் டு திருச்சி ரோடு தேவிப்பட்டிணம் கிழக்கு கடற்கரை சந்திப்பு அருகில் 8 மணிக்கு சென்று போதை பொருள் சம்பந்தமாக மேற்படி இடத்தில் வாகன தணிக்கை செய்தபோது சுமார் 9 மணியளவில் சம்பவ இடத்திற்கு வந்த டி.என்.01 AE 2693 என்ற எண்ணுள்ள ஸ்கோடா கிரே கலர் காரை தகவலாளி அடையாளம் காட்டி செல்ல அந்த காரை நிறுத்தி தணிக்கை செய்த அந்த வாகனத்தில் வந்தவர்களிடம் எங்களுடைய அடையாள அட்டை காட்டி, நாங்கள் ஜேடீ-ஊஐனு போலீசாா் என்றும் அறிமுகப்படுத்திக்கொண்டு, அவர்களிடம் பெயர் விலாசம் கேட்டபோது அவர்கள் 1. பிரசன்னாபாண்டி, கோடாங்கிநாயக்கன்பட்டி. 2. அய்யர்சாமி, மானூத்து 3.முத்துபாண்டி, கனவாய்பட்டி என்ற முகவரியில் வசித்து வசிப்பதாக சொன்னார்கள். தகவலாளி கூறியபடி மேற்சொன்ன நபர்களின் பெயர் மற்றும் விலாசம் சரியாக இருந்தது. பின்னர் அவர்களிடம் எங்களிடம் அடையாள அட்டையை காண்பித்து, எங்களுக்கு வந்த தகவலை கூறியும் மேற்படி நபர்கள் வந்த வாகனத்தின் மீதான சோதனை நடவடிக்கை மேற்கொள்ள அந்த இடத்தில் இருந்த தனிநபர்களை களஞ்சியம், கதிரவன், ராமநாதபுரம் ஆகியோர்களை சாட்சியாக நியமித்தும், மேற்படி நபர்களிடம் உங்களையும் உங்களது உடைமைகளையும் சோதனை செய்ய வேண்டும் அவ்வாறு சோதனையிட வேண்டுமென்றால் உங்களை அருகில் உள்ள நீதித்துறை நடுவரிடமோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமோ அழைத்து சென்று சோதனையிட சொல்ல NDPS Act-ன் படி உங்களுக்கு உரிமை உள்ளது உங்கள் விருப்பம் என்ன என்று

கேட்டபோது அதற்கு அவர்கள் வேறு எங்கு சோதனைக்கு வரவில்லை என்றும் காவல் அதிகாரியாகிய தாங்களே சோதனையிடலாம் என்று சொன்னதன்பேரில் 9 மணிக்கு சோதனை சம்மத கடிதம் தயார் செய்தும் சாட்சிகள் களஞ்சியம் மற்றும் கதிரவன் மற்றும் எதிரிகள் கையொப்பமிட்டு, அந்த சோதனை சம்மத கடிதம் **அ.த.சா.ஆ.2** ஆகவும், 1வது நபர் பிரச்சன்னபாண்டி என்பவர் டி.என்.01 AE 2693 என்ற எண்ணுள்ள ஸ்கோடா காரிலிருந்து எடுத்து ஆஜர்படுத்திய 7 வெள்ளைநிற சாக்கு மூட்டையும், பணம் ரூ.110/. டிரைவிங் லைசன்ஸ் நகல்-1, கார் ஆர்.சி.புக் நகல் -1, செல்போன்-1. அதில் வெள்ளை நிற சாக்கு பையை சோதனை செய்ய அதில் கஞ்சா இருந்தது. அதில் நாங்கள் கொண்டு சென்ற தராசில் எடை போட்டு பார்க்க, ஒவ்வொன்றிலும் தலா 20 கிலோ எடை கொண்டதாக இருந்தது. மொத்தம் 140 கிலோ கஞ்சா இருந்தது. அதில் ஒவ்வொரு சாக்கு பையிலும் தலா 50 கிராம் 2 மாதிரிகள் எடுத்து, காக்கி கவரில் வைத்து பேக் செய்தும், அதில் NIB-CID சீல் வைத்தும், அவற்றிற்கு S1 to S14 வரை என குறியீடு செய்தும், விவர லேபில் ஒட்டப்பட்டது. அந்த மாதிரிகள் **சா.பொ.1 முதல் சா.பொ.14** என குறியீடு செய்தும், மீதமுள்ள ஒவ்வொரு சாக்கு மூட்டையிலும் 19.900 கிராம் கஞ்சாவை அதே வெள்ளை நிற சாக்கு பையில் வைத்தும், NIB-CID சீல் வைத்தும், விவர லேபில் ஒட்டப்பட்டது. அவற்றிற்கு P1 to P14 வரை என குறியீடு செய்தும், மீதமுள்ள மாதிரிகள் **சா.பொ.15 முதல் சா.பொ.21** என குறியீடு செய்தும், டி.என்.01 AE 2693 என்ற எண்ணுள்ள ஸ்கோடா கார் **சா.பொ.22** ஆகவும், கார் சாவி **சா.பொ.23** ஆகவும், போட்டரியுடன் கூடிய லெனோவா செல்போன் **சா.பொ.24** ஆகவும், பணம் ரூ.110/- **சா.பொ.25** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கைப்பற்றப்பட்ட சொத்துக்களை சாட்சிகள் களஞ்சியம் மற்றும் கதிரவன் மற்றும் எதிரிகள் கையொப்பமிட்டு, விவர லேபில் ஒட்டப்பட்டது. பின்னர் மேற்படி சொத்துக்களை அதே சாட்சிகள் முன்னிலையில் 1வது எதிரி பிரச்சன்ன பாண்டி என்பவரிடமிருந்து மகஜரில் கைப்பற்றிப்பட்டது. அந்த மகஜர் **அ.த.சா.ஆ.3** ஆகவும், பின்னர் 2வது எதிரியான அய்யர்சாமியை சோதனை செய்தபோது சாம்சங் செல்போன்-1 மேற்படி சாட்சிகள் முன்னிலையில் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த மகஜர் **அ.த.சா.ஆ.4** ஆகவும், அந்த சாம்சங் செல்போன் **சா.பொ.26** ஆகவும், 3வது நபரான முத்துபாண்டி என்பவரிடம் இருந்து டிரைவிங் லைசன்ஸ் நம்பர் TN5820110002313 மேற்படி சாட்சிகள் முன்னிலையில் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த மகஜர் **அ.த.சா.ஆ.5** ஆகவும், பின்னர் 13.00 மணிக்கு கஞ்சா வைத்திருந்த குற்றத்திற்காக மேற்படி எதிரிகளுக்கு காரணம் கூறி கைது அறிவிப்பு கொடுத்து எதிரிகள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் கையொப்பம் செய்து கைது செய்தேன். அந்த கைது அறிவிப்பு **அ.த.சா.ஆ.6** ஆகவும், மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் 13.30 மணிக்கு 1வது எதிரியிடமும், 14.30 மணிக்கு 2வது எதிரியிடமும், 15.30 மணிக்கு 3வது எதிரியிடமும் ஒப்புதல் வாக்குமூலமும் பெற்றேன். பின்னர் எதிரிகள் மற்றும் சொத்துக்ள், சாட்சிகள் ஆவணங்களுடன் 18.30 மணிக்கு நிலையம் வந்து NIB-CID கு.எண்.19/2017, சட்டப்பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)©, 25, 29(1), 27(a)NDPS Act- ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.7** ஆகவும், நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 95 மூலம் பூர்த்தி செய்தேன். சாட்சிகள் ஆனந்தன்,முருகேசன், ராஜேஸ்கண்ணன்,களஞ்சியம், அழகுதுரை, அருள்சுந்தர்சி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 3 எதிரிகளை காவல் அடைப்பு வேண்டுகோள் கடிதத்துடன் ராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கில் பிரிவு 57 NDPS படி காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு விரிவான அறிக்கை தயார் செய்து அனுப்பி வைத்தேன். அந்த பிரிவு 57 படியான அறிக்கை **அ.த.சா.ஆ.8** ஆகவும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட கஞ்சாவிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகளை ரசாயன பரிசோதனை செய்ய வேண்டி இந்நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து ராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு திரு.ராஜேஷ்கண்ணன் என்பவர் மூலம் அனுப்பி வைத்தேன். மேல்விசாரணைக்காக காவல் துணை கண்காணிப்பாளர் வசம் ஒப்படைத்தேன். படிவம் 95 (எண்ணிக்கை-3) **அ.த.சா.ஆ.9,10,11** ஆகவும், டி.என்.01 AE 2693 என்ற எண்ணுள்ள ஸ்கோடா காரின் ஆர்.சி.புக் நகல் **அ.த.சா.ஆ.12** ஆகவும், மற்றும் லைசன்ஸ் நகல் **அ.த.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அ.த.சா.ஆ.9,10 ஆவணங்கள் எதிரிகள் தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

முதல்விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் முதல்தகவல் அறிக்கையையும், மற்ற வழக்கு கோப்புகளை பார்த்து தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். பிரிவு 50ன் கீழ் சோதனை சம்மத கடிதம் ஒவ்வொரு எதிரிக்கும் தனித்தனியாக கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். கைது அறிவிப்பு அ.த.சா.ஆ.6 நேரத்தில் 13.00 மணி என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். கைது அறிவிப்பு, சோதனை சம்மத கடிதம், அத்தாட்சி ஆகியவற்றில் எங்களுடன் வந்த காவல் துறையினரின் கையொப்பம் பெறப்படவில்லை என்றால் சரிதான். என்னுடன் வந்த காவலர் அன்பழகன் என்பவர் சம்பவ இடத்தில் ஒப்புதல் வாக்குமூலம் மட்டும் தான் எழுதியுள்ளார். என்னை துணை கண்காணிப்பாளர் 18.07.2017ம் தேதி விசாரித்தார். என்னை துணை கண்காணிப்பாளர் விசாரித்தபோது தராசில் எடை போட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதில் சாம்பில் எடுத்த விவரங்கள் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்ற விவரத்தை எந்த ஆவணங்களிலும், முதல் விசாரணையிலும், துணை கண்காணிப்பாளர் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். கைது குறிப்பாணையில் 13.30 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். கைது அறிவிப்பில் 13.00 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். கைது குறிப்பாணையை கணினியில் தட்டச்சு செய்தவர் த.கா. அன்பழகன் ஆவார். கைது குறிப்பாணையில் 2,3 காலங்களில் கு.எண். மற்றும் சட்டப்பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் மாதிரிகள் நீதித்துறை நடுவர் முன்பு பிரிவு 52(A)ன் கீழ் சாம்பில்கள் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ.1 தகவல் யாருக்கு அனுப்பப்பட்டது என்ற

குறிப்பு இல்லை என்றால் சரிதான். அதில் நான் எத்தணை மணிக்கு பெற்றுக்கொண்டேன் என்று என்னுடைய கையெழுத்து இல்லை என்றால் சரிதான். தேவிப்பட்டிணம் கிழக்கு கடற்கரை சாலை பகுதியை சேர்ந்த தனி நபர்கள் யாரையும் சாட்சியாக போடவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் சுமார் 8 மணி நேரம் இருந்தோம். மேற்படி சாலை போக்குவரத்து உள்ள சாலை என்றால் சரிதான். போக்குவரத்தில் உள்ள நபர்களை சாட்சியாக அழைக்கவில்லை என்றால் அழைத்தோம் வரவில்லை. அவர்கள் பெயர் விலாசம் தெரியாது. வாகன சோதனை செய்ய சென்றால் எந்த வாகனத்தை சோதனை செய்தோம் என்றும் எத்தனை வாகனத்தை சோதனை செய்தோம் என்றும் அந்த வாகனத்தின் எண்கள் ஆகியவற்றை குறிப்பிட ரெக்காடுகள் உள்ளதா என்றால் இல்லை. தகவலில் காரின் பதிவு எண் மற்றும் எந்த கம்பெனி வாகனம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தகவலில் அய்யர்சாமி என்ற பெயர் ஓயிட்டனர் வைத்து எழுதப்பட்டது என்றால் சரிதான். நாங்கள் சென்ற வாகனத்திற்கு லாக் புக் உள்ளதா என்றால் உண்டு. அந்த லாக் புக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அன்றைய தினம் அந்த வாகனத்தை யார் ஒட்டி சென்றார்கள் என்ற குறிப்பு ஏதுவும் இல்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் வாகனத்தில் எந்த பகுதியில் கஞ்சா மூட்டைகள் வைத்திருந்தார்கள் என்ற குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். மேற்படி சங்கதியை எனது முதல்விசாரணையிலும் வாக்குமூலத்திலும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு கோப்புகளை மேல்விசாரணைக்காக துணை கண்காணிப்பாளர் வசம் 04.03.2017ம் தேதி ஒப்படைத்தேன். 07.03.2017ம் தேதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை கொடுத்தார். நான்சொல்வது போல் எனக்கு தகவல் வரவில்லை என்றும், மேற்படி தகவலை காவல் துணை கண்காணிப்பாளர் அனுப்பியதாக சொல்வது பொய் என்றும், மேற்படி சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும், மேற்படி சமயத்தில் எதிரிகள் காரில் வந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிரிகளிடமிருந்து கஞ்சா கைப்பற்றப்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் மற்றும் பொருட்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து வழக்கு தோதிற்காக பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

<u>4வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

எனக்கு கிடைத்தாக சொல்லப்படும் தகவலில் 4வது எதிரி செல்வத்தின் பெயர் இல்லை என்றால் சரிதான். 4வது எதிரி செல்வம் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான். 4வது எதிரியிடமிருந்து கஞ்சா எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். தகவலை நான் தான் எழுதினேன். தகவல் கிடைக்கும்போது காவல் துணை கண்காணிப்பாளர் எங்கு இருந்தார் என்றால் அவருடைய அறையில் இருந்தார். தகவலை பதிவு செய்ததற்கு அதில் என்னுடைய கையெழுத்து இல்லை என்றால் சரிதான். தகவலை காவல் துணை கண்காணிப்பாளர் பெற்று கொண்டதற்கு குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். பிரிவு 42(2)ன் கீழ் தகவலின் நகல்

என்னுடைய உயர்அதிகாரியான காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தை தவிர சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்டதாக சொல்லப்படும் எந்தொரு ஆவணங்களிலும் 4வது எதிரி செல்வத்தின் பெயர் தலைமறைவு எதிரியாக காட்டப்படவில்லை என்றால் சரிதான்.ஒப்புதல் வாக்குமூலத்தை தவிரித்து 4வது எதிரி செல்வத்திற்கு எதிராக இந்த வழக்கில் வேறு எந்த ஆவணங்களும் நீதிமன்றத்திலோ,காவல் துணை கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொல்வது போல் தகவல் வரவில்லை என்றும் எந்தொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றும் 1 முதல் 3 எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலங்கள் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்து காவல் நிலையத்தில் வைத்து வழக்கின் தோதிற்காக பின்னிட்டு தயார் செய்தது என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கும் 4வது எதிரிக்கும் எவ்வித தொடர்போ சம்பந்தமோ இல்லை என்றால் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு NIB-CID அலுவலகத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. 4வது எதிரிக்கும் இந்த வழக்கில் உள்ள மற்ற எதிரிகளுக்கு எவ்வித தொடர்போ சம்பந்தமோ இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் NDPS சட்ட வழக்குகள் முறையாக கடைபிடிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.